தேதி.07.10.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.145/2022 திரு. ராஜ்குமார் பி.சா.3

<u>பி.சா.3: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இவ்வழக்கு சொத்தானது எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கெஞ்சனூர் கிராமத்தில் உள்ளது. பழனிச்சாமி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் தாளப்பள்ளத்தில் குடியிருந்து வருகிறார். தாவா சொத்து இடத்திற்கும் பழனிச்சாமி இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1.5 கி.மீ தூரம் இருக்கும். பழனிச்சாமிக்கு குடியிருக்கும் இடத்திலேயே தோட்டம் உள்ளது என்றால் சரிதான். அவர் அங்கு தான் நிரந்தரமாக உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மகேந்திரனுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தை 12.10.2015ம் தேதியில் வாதிக்கு கிரையம் செய்து வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. பிரதிவாதி, வாதியிடம் கடன் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் கடன் வாங்கினார் என்றால் தேதி நினைவில் இல்லை. கடனுக்காக அடமானம் பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி அடமானப்பத்திரம் எவ்வளவு ரூபாய் வட்டிக்கு என்று எழுதப்பட்டது என்றுதெரியுமா என்றால் இல்லை. கடன் தொகை எவ்வளவு என்றால் ரூபாய் ஐந்து லட்சம் எழுதப்பட்டது. அதற்கு வட்டி எவ்வளவு எழுதப்பட்டது என்றால் ரூ.20,000/-ம் எழுதப்பட்டிருந்தது. எத்தனைவருடம் அடமானம் என்று எழுதப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியிடம் 1ம்பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும்,

கிரையப்பத்திரம் தான் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்து சொத்தை சுவாதீனம் கொடுத்துவிட்டு அவர் சொந்த ஊரில் இருந்த சமயம் பூட்டை உடைத்து பிரதிவாதி சொத்தை வாதி அபகரித்துவிட்டார் என்றால் சரியல்ல. பழனிச்சாமி தனது சொத்தை திருப்பி தரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். என்னுடன் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் தெரியாது. அடமான பத்திரத்தை எந்த பத்திர எழுத்தர் எழுதினார் என்றால் குமரேசன் என்பவர் எழுதினார். நான் சொல்வது பொய் என்றும், அவர் கேட்டுக்கொண்டதின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.